**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

முன்னிலை : **திரு.M.பொன்பாண்டி, B.A, B.L.,**

**நீதித்துறை நடுவர், பழனி**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் ஆடி மாதம் 6ம் நாள்**
**2026ம் வருடம் ஜூலை திங்கள் 22ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.298/2018**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
பழனி தாலுகா காவல் நிலையம்,
குற்ற எண்.303/2017
சட்டப் பிரிவுகள் 279, 304 A இ.த.ச ... **குற்றமுறையீட்டாளர்**

**எதிராக**

ஈஸ்வரன், 59/2017
த/பெ.பெரியசாமி,
2வது வார்டு, வடக்கு தெரு,
கோதைமங்கலம்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம். ... **எதிரி**

இந்த வழக்கு 11.12.2018ஆம் நாளன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு இன்று இறுதி விசாரணைக்காக வந்த போது அரசின் சார்பில், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திரு.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுரேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டும், ஆவணங்களை கூர்ந்து பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**<u>முகப்புரை:–</u>**

1. கடந்த 31.08.2017ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் இவ்வழக்கின் வாதியின் தந்தை சந்திரகுமார் அவரது மனைவி வசந்தி இருவரும் நெய்க்காரப்பட்டி வங்கிக்கு சென்றுவிட்டு வடக்கு நோக்கி வரும்போது அதே ரோட்டில் சந்திரகுமாருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த TN 57 T 164 BOWER

TRACK என்ற டிராக்டரை எதிரி தான் ஓட்டி வந்த வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து சந்திரகுமார் சென்று கொண்டிருந்த TN 39 AF 9649 TVS XL Heavy Duty என்ற வாகனத்தின் மீது மோதியதில் சந்திரகுமாருக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே உயிர் இழந்துள்ளதாகவும், எனவே, எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304Aன் படி தண்டிக்கத்தக்க குற்றம் செய்திருப்பதாகவும், பழனி தாலுகா காவல் நிலைய ஆய்வாளரால் இந்த நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.சவின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் முன்னிலையானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீதான இ.த.ச. 279, 304A பிரிவுகளின் கீழான குற்றங்கள் பற்றி கு.வி.மு.ச பிரிவு 251ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துக் கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>அரசுத் தரப்பு சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–</u>**

சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் பழனி தாலுகா காவல்நிலையத்தில்

கடந்த 01.09.2017ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது திலகவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து பழனி தாலுகா காவல்நிலைய கு.எண்.303/2017 பிரிவுகள் 279, 304(A) இ.த.ச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்து, பின்னர் இவ்வழக்கின் கோப்பை காவல் ஆய்வாளர் புகழேந்தி அவர்களிடம் ஒப்படைத்ததை அவர் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தமிழன், நந்தகுமரன் ஆகியோர் முன்னிலையில் 01.09.2017ம் தேதி காலை 8.00 மணிக்கு சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வைமகஜர் தயார் செய்து அ.சா.ஆ.5 மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் 01.09.2017ம் தேதி இறந்துபோன சந்திரகுமார் என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய தலைமை காவலர் சந்தானகுமார் என்பவரிடம் தபாலை கொடுத்து அனுப்பி வைத்தார். பின்பு பழனி அரசு மருத்துவமனை சவகிடங்குக்கு முன்பு வைத்து இறந்து போன சந்திரகுமார் என்பவர் பிரேதத்தின் மீது 01.09.2017ம் தேதி மதியம் 09.00 மணி முதல் 10.30 வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, பின்பு இறப்பின் காரணம் அறிவதற்காக உடற்கூறாய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து தலைமை காவலர் சந்தானகுமார் என்பவர் மூலம் மேற்படி பிரேதத்தை பிரேத கூறாய்வு செய்ய அனுப்பி வைத்து, பின்னர் இவ்வழக்கின் எதிரி ஈஸ்வரன் என்பவர் 02.09.2017ம் தேதி நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணை பெற்று விடுவிக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 57 T 1164 என்ற Bower Track என்ற

டிராக்டரையும் மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன சந்திரகுமார் என்பவர் ஓட்டி சென்ற TN 39 AF 9649 என்ற இருசக்கர வாகனமான TVS XL Heavy Duty Super என்ற வாகங்களை தணிக்கை செய்ய பழனி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார். இவ்வழக்கின் இறந்துபோனவரின் பிரேதத்தை உடற்கூறாய்வு செய்த மருத்துவர் ஸ்ரீதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 பிரேத கூறாய்வு அறிக்கை பெற்று, பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து பின்பு வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 TN 57 T 1164 என்ற Bower Track என்ற டிராக்டர் வாகனத்தின் ஆய்வறிக்கை பெற்று, பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து பின்பு வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9 TN 39 AF 9649 என்ற இருசக்கர வாகனமான TVS XL Heavy Duty Super வாகனத்தின் ஆய்வறிக்கை பெற்று, மேற்படி வாகனங்களை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் மோகன பிரியா மேற்படி இரு வாகனங்களையும் வாகன விபத்து இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என சான்றளித்துள்ளார். இந்த வழக்கில் பிரேத பரிசோதனைக்கு சென்ற காவலர் சந்தானகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.சவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. **<u>கு.வி.மு.ச பிரிவு 313(i)(b)ன் கீழ் எதிரிகளிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில்</u>**

அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி

அது சம்மந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(i)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பில் எந்தவித சாட்சியமும் சான்றாவணமும் முன்வைக்கப்படாத காரணத்தினால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இருதரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான இ.த.ச 279, 304A பிரிவுகளின் கீழான குற்றங்களானது அரசு தரப்பால் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்:–</u>

எதிரி தான் ஓட்டி வந்த TN 57 T 164 BOWER TRACK என்ற டிராக்டரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து சந்திரகுமார் சென்று கொண்டிருந்த TN 39 AF 9649 TVS XL Heavy Duty என்ற வாகனத்தின் மீது மோதியதில் சந்திரகுமாருக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்படுத்தி அவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றங்களானது அ.சா.1 முதல் அ.சா.5 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டணை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்:–</u>

அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் பொய் சாட்சியம்

அளித்துள்ளார்கள் என்றும், விபத்தானது எதிரியின் தனது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததால் நிகழவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, எதிரிக்கு எதிரான குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>10. தீர்வு:–</u>**

கடந்த 31.08.2017ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் இவ்வழக்கின் வாதியின் தந்தை சந்திரகுமார் அவரது மனைவி வசந்தி இருவரும் நெய்க்காரப்பட்டி வங்கிக்கு சென்றுவிட்டு வடக்கு நோக்கி வரும்போது அதே ரோட்டில் சந்திரகுமாருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த TN 57 T 164 BOWER TRACK என்ற டிராக்டரை எதிரி தான் ஓட்டி வந்த வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து சந்திரகுமார் சென்று கொண்டிருந்த TN 39 AF 9649 TVS XL Heavy Duty என்ற வாகனத்தின் மீது மோதியதில் சந்திரகுமாருக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே உயிர் இழந்துள்ளதாகவும், எனவே, போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. அ.சா.1 புகார் கொடுத்து சார்பு ஆய்வாளர் கோவர்த்தனாம்பிகை என்பவர் பெற்று குற்ற எண்.303/2017ல் 279, 304A என்ற பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து, அ.சா.3 மற்றும் அ.சா.4 முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்பு சந்திரகுமார் என்பவரின் பிரேதத்தின் மீது பழனி அரசு மருத்துவமனையின் சவக்கிடங்கின் முன்வைத்து பிரேத விசாரணை நடத்தி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 தயார்

செய்ததாகவும், பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து, அதன் அடிப்படையில் பட்டியல் சாட்சி–8 மருத்துவர் திரு.ஸ்ரீதரன் என்பவர் பிரேத பரிசோதனை நடத்தி சந்திரகுமாரின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 பெறப்பட்டது என்றும், இவ்வழக்கில் விபத்தினை ஏற்படுத்திய TN 57 T 1164 என்ற Bower Track என்ற டிராக்டர் வாகனம் மற்றும் TN 39 AF 9649 என்ற பதிவெண் கொண்ட TVS XL Heavy Duty Super இருசக்கர வாகனம் ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்வாளருக்காக அனுப்பி வைத்து அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 பெற்று, 31.08.2017ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் எதிரி தான் ஓட்டி வந்த TN 57 T 164 BOWER TRACK என்ற டிராக்டர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து சந்திரகுமார் சென்று கொண்டிருந்த TN 39 AF 9649 TVS XL Heavy Duty என்ற வாகனத்தின் மீது மோதியதில் சந்திரகுமாருக்கு என்பவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கு அப்பால் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

12. இந்த எதிரியின் கவனக்குறைவான அல்லது அசட்டுத்தனமான (Negligent or Rash Manner) செயலால் தான் விபத்து ஏற்பட்டு, சந்திரகுமார் என்பவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளதா என்று அரசு தரப்பில் தகுநிலை சந்தேகத்திற்கு அப்பால் பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே கண்டறியப்படவேண்டியதாகும். இந்த வழக்கில் எதிரி தான் ஓட்டி வந்த TN 57 T 164 BOWER TRACK என்ற டிராக்டர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து சந்திரகுமார் சென்று கொண்டிருந்த TN 39 AF 9649 TVS XL Heavy Duty என்ற வாகனத்தின் மீது மோதியதில் சந்திரகுமாருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்று வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

13. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2017ம் வருடம் ஒரு நாள் மதியம் சுமார் 1.00 மணியளவில் தனது அப்பா சந்திரகுமார் வியாபாரத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தபோது கருப்புச்சாமி கோவில் அருகே விபத்து ஏற்பட்டதாகவும், தனது அப்பா XL இருசக்கர வாகனம் ஓட்டி சென்றதாகவும், தனது அப்பா ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது பின்னால் வந்து டிராக்டர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், தனது அப்பாவின் மேல் டிராக்டரின் டயர் ஏறி தலை நசுங்கிவிட்டதாகவும், பின்னர் சம்பவம் கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்று பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு பழனி தாலுகா காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும், தான் சம்பவம் கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது மேற்படி டிராக்டரின் டிரைவர் சம்பவயிடத்தில் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 2017ம் வருடம் ஒரு நாள் V.K. மில்லுக்கு ஆதார் கார்டு விசயமாக சென்றுவிட்டு சின்னகலையம்புத்தூர் அருகே வரும்போது லோடு ஏற்றி வந்த டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், தனது அண்ணன் ஓட்டி சென்ற TVS XLன் வாகன பதிவெண் தனக்கு தெரியாது என்றும், டிராக்டர் பதிவெண் தனக்கு தெரியாது என்றும், மேற்படி சம்பவத்தை தான் கேள்விபட்டு வந்து பார்த்தபோது டிராக்டர் சம்பவயிடத்தில் இருந்ததாகவும், டிரைவர் இல்லை என்றும், தனது அண்ணனுக்கு தலை நசுங்கி அங்கே இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15. இந்த புகார்தாரரான அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து அவர் கேள்விப்பட்ட சாட்சி என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள வசந்தி என்பவர் ஒரு நிலையான முகவரியில் இல்லாமல் பல ஊர்களுக்கு சென்று வியாபாரம் செய்து வருவதால் வெளியூரில் வைத்து இறந்துவிட்டதால் இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தார்கள் என்று காவல் துறையினர் தெரிவித்தார்கள்.

16. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி குறித்து சாட்சியமளித்த அ.சா.5 திரு.சேந்தர் மூர்த்தி அவர்களுடைய சாட்சியத்தை மட்டுமே வைத்து, எதிரியின் கவனக்குறைவான அல்லது அசட்டுத்தனமான (Negligent or Rash Manner) செயலால் தான் விபத்து ஏற்பட்டு, சந்திரகுமார் என்பவருக்கு இறப்பு ஏற்பட்டது என்று முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. மேற்கண்ட காரணம், விவாதம் மற்றும் பரிசீலனை ஆகியவற்றின் அடிப்படையில், எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304A கீழான குற்றங்கள் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304A கீழ் குற்றவாளி இல்லை என்றும் இந்நீதிமன்றம் கண்டறிகிறது.

18. எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304Aன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

<u>வழக்குச்சொத்து குறித்த உத்தரவு:-</u>

19. இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 22ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 18:15:51 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>** :

| வ.எண் | அரசு தரப்பு சாட்சிகள் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திலகவதி |
| 2. | அ.சா.2 | ஜீதா |
| 3. | அ.சா.3 | தமிழன் |
| 4. | அ.சா.4 | நந்தகுமார் |
| 5. | அ.சா.5 | சேந்தர் மூர்த்தி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் –</u>**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனு | 01.09.2017 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜர் | 01.09.2017 | அ.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| 3 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | 01.09.2017 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4 | முதல் தகவல் அறிக்கை | 01.09.2017 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 01.09.2017 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6 | பிரேத விசாரணை அறிக்கை | 01.09.2017 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |
| 7 | பிரேத கூறாய்வு அறிக்கை | 01.09.2017 | அ.சா.ஆ.7 | அ.சா.5 | அசல் |
| 8 | TN 57 T 1164 என்ற Bower Truck என்ற டிராக்டர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | 22.09.2017 | அ.சா.ஆ.8 | அ.சா.5 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | TN 39 AF 9649 என்ற TVS XL Heavy Duty Super இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | 09.11.2017 | அ.சா.ஆ.9 | அ.சா.5 | அசல் |

**எதிரி தரப்பில் சாட்சிகள்** : இல்லை

**எதிரி தரப்பில் சான்று பொருள்கள்** : இல்லை

**எதிரி தரப்பில் சான்றாவணம்** : இல்லை

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 18:16:00 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**

**குறிப்பு:**

1. இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க வந்த எந்த சாட்சிகளும் விசாரிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**Judicial Form No.60**

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Dindigul

Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

| Date of Judgment : 22.07.2026 | | | | | | | | | Explanation of delay and remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Offence** | **Report of complaint** | **Apprehension of accused** | **Released on Bail** | **Commencement of trial** | **Close of trial** | **Sentence or order** | | | |
| 31.08.2017 | 01.09.2017 | 02.09.2017 | 02.09.2017 | 18.02.2019 | 14.07.2026 | 22.07.2026 | F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F. | 01.09.2017<br>22.11.2017<br>11.12.2018<br>11.12.2018 | Complainant side evidence till 08.07.2026 |

**Judgment in CC 298/2018 on the file of the Judicial Magistrate of Palani.**

**Complainant:** The Inspector of Police, Palani Taluk in Cr.No.303/2017

| Name of the Accused | Age | Fathers/Husband’s Name |
|---|---|---|
| 1) Eswaran | 40/2017 | Periyasamy |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | Kothaimangalam | Palani |

**Offence** **:** Section 279, 304(A) IPC.

**Sentence** **:** Accused is acquitted U/s.255(1) of Cr.P.C from the charges of the Section 279, 304(A) IPC.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 18:16:08 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**Judicial Form No.61**
**(See Rule 106)**
**ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, Palani**
**JUDGMENT IN CC 298 OF 2017**
**ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI**

**Complainant :** Inspector of Police, Palani Taluk PS
**Accused :** Eswaran
**Offence :** Section 279, 304(A) IPC
**Finding :** Accused is found not guilty U/s 279, 304(A) IPC.
**Sentence :** Accused is acquitted U/s.255(1) of Cr.P.C from the charges of the Section 279, 304(A) IPC.
**Property :** NIL

| SI. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Eswaran | Periyasamy | --- | --- | Kothaimangalam | 40/2017 |

| **Date of** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Occurrence** | **Complaint** | **Apprehension or appearance** | **Release on bail** | **Commence ment of trail** | **Close of trail** | **Sentence or order** |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 31.08.2017 | 01.09.2017 | 02.09.2017 | 02.09.2017 | 18.02.2019 | 14.07.2026 | 22.07.2026 |

| **Explanation of delay** |
|---|
| (15) |
| Complainant Side Evidence till 08.07.2026 |

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 18:16:13 +0530

**Judicial Magistrate,**
**Palani**

**Case Summary in CC 298/2018**

| S. No | Description | Remarks |
|---|---|---|
| 1 | The Period of Remand of the Accused/Surrender | 202.09.2017 |
| 2 | Date of filing of the Complaint/Final Report in the Court | 22.11.2017 |
| 3 | The date of Commital of the Case to the court of session | Not applicable |
| 4 | First Questioning u/s 240 of crpc | 18.02.2019 |
| 5 | Filling of Miscellaneous petition and result | Nil |
| 6 | Date of Examination in chief and Cross examination of witness. | <table><tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW1</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr><tr><td>PW2</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr><tr><td>PW3</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr><tr><td>PW4</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr><tr><td>PW5</td><td>08.07.2026</td><td>08.07.2026</td></tr></table> |
| 7 | NBW Issued date | NIL |
| 8 | NBW recalled | NIL |
| 9 | Questionings u/s 313(i)(b) of Cr.P.C. | 14.07.2026 |
| 10 | Details of Abscondence of an accused and his appearance/production | NIL |
| 11 | Grant of stay by superior courts and the results there of | NIL |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 18:16:19 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No.298/2018**
**Date : 22.07.2026**

Accused Present. Judgment pronounced in Open Court.

Accused is acquitted U/s.255(1) of Cr.P.C from the Sections 279, 304(A) of IPC.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 18:16:23 +0530

**Judicial Magistrate,**
**Palani.**